# பொருளியல்

## பொருட்கள் சேவைகளின் கொள்வனவு மூலம் தேவைகளும் விருப்பங்களும் பூர்த்தி செய்யப்படும் விதம்



**தேர்ச்சி : 1.0 பொருளாதார முறைமையொன்றில் அடிப்படைப் பொருளாதாரப்**

**தேர்ச்சி மட்டம் : 1.2**
**பொருட்கள், சேவைகளின் கொள்வனவு மூலம் தேவைகளும் விருப்பங்களும் திருப்திப்படுத்தப்படும் முறையைக் காட்டுவார்.**



## தேவைகளும் விருப்பங்களும்



| தேவைகள் | விருப்பங்கள் |
|---|---|
| மனிதன் உயிர் வாழ்வதற்கு அவசியமானவை | தேவைகளை நிறைவேற்றும் பல்வேறுபட்ட வடிவங்கள் |
| வரையறுக்கப்பட்டவை | வரையறுக்கப்படாதவை |
| உயிரியல் காரணிகளுடன் தொடர்புபட்டவை | பாரம்பரியம், சம்பிரதாயம், கலாசாரம், பழக்க வழக்கங்கள் என்பவற்றுடன் தொடர்புபட்டவை |
| காலத்திற்கு ஏற்ப மாற்றம் அடையாதவை | காலத்திற்கு ஏற்ப மாற்றமடைபவை |
| எல்லோருக்கும் பொதுவானவை | நபருக்கு நபர் வேறுபடும் |
| உதாரணம் :<br>உணவு<br>உடை<br>கல்வி | உதாரணம்:<br>சோறு, இடியப்பம்<br>வேட்டி, பஞ்சாபி<br>ஆங்கிலக் கல்வி, விஞ்ஞானக் கல்வி |

மேற்கூறிய மனிதத் தேவைகளுடன் இணைந்த விருப்பங்கள் பொருளியல் ரீதியானவை என நோக்குமிடத்து அவை பொருட்கள், சேவைகள் மூலம் பூர்த்தி செய்யப்படுகின்றன.

தொகுப்பு : திரு.இ.பிரபாகரன், ஆசிரியர் - பொருளியல், (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ்ப்பாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# பண்டங்கள்

பண்டம் என்பது நேர்க்கணிய திருப்தியைக் கொண்டதாகும். அதாவது பயன்பாடொன்றை பெற்றுத்தரக் கூடியவையாகும்.

பண்டங்கள்
- பொருளாதாரப் பண்டம்
- இலவசப் பண்டம் (பொருளாதாரமல்லாதவை)

| பொருளாதாரப் பண்டம் | இலவசப் பண்டம் (பொருளாதாரமல்லாதவை) |
|---|---|
| மனித தலையீட்டுடன் காரணிகளை ஒருங்கிணைத்து உற்பத்தி செய்யப்பட்டவை | இயற்கையில் இருந்து பெறப்படுபவை |
| வளச் செலவும் அமையச் செலவும் உள்ளவை | வளச் செலவும் அமையச் செலவும் அற்றவை |
| நிரம்பலில் அருமைத்தன்மை காணப்படும் | நிரம்பலில் அருமைத்தன்மை அற்றவை. அதாவது பூச்சிய விலையில் எல்லையற்ற நிரம்பல் |
| விலையைக் கொண்டிருக்கும் | பூச்சிய விலையுடையவை |
| தெரிவுப் பிரச்சினையை உருவாக்கும் | தெரிவுப் பிரச்சினையை உருவாக்காது |
| உதாரணம் :<br>புத்தகம்<br>அரிசி<br>மா | உதாரணம்:<br>சூரிய ஒளி<br>வளி மண்டலம் |

- இலவசப் பண்டங்கள் பொருளாதாரப் பண்டங்களாக மாற்றமடையக்கூடியவை.
- ஆனால் பொருளாதாரப் பண்டங்கள் இலவசப் பண்டங்களாக மாறாதவை.
- இலவசப் பண்டங்கள் பொருளாதாரப் பண்புகளை பெறும் போது பொருளாதாரப் பண்டங்களாக மாற்றமடைகின்றன.
- இலவசப் பண்டங்கள் பொருளாதாரப் பண்டங்களாக மாறக்கூடிய சந்தர்ப்பங்கள்:
    1. நோயாளிக்கு வழங்கப்படும் ஒட்சிசன் வாயு
    2. சூரிய ஒளியைப் பயன்படுத்தி மின்சார உற்பத்தி

தொகுப்பு : திரு.இ.பிரபாகரன், ஆசிரியர் - பொருளியல், (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ்ப்பாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# வளங்கள்

மனித விருப்பங்களை பூர்த்தி செய்ய அவசியமான பண்டங்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்ய பயன்படும் உள்ளீடுகளே வளங்கள் எனப்படுகின்றன.

வளங்கள்
- பொருளாதார வளங்கள்
- பொருளாதாரமல்லாத வளம் (இயற்கை வளம்)

| பொருளாதார வளங்கள் | பொருளாதாரமல்லாத வளம் (இயற்கை வளம்) |
|---|---|
| சமூகத்தின் எல்லையற்ற விருப்பங்களுடன் ஒப்பிடுமிடத்து அருமையாக உள்ள வளங்கள் | அருமையற்ற வளங்கள் அதாவது இயற்கையில் கிடைப்பவை |
| வளப் பயன்பாட்டின் போது அமையச் செலவு தோன்றும் | அமையச் செலவை தோற்றுவிக்காதவை |
| உதாரணம் :<br>நிலம்<br>உழைப்பு<br>மூலதனம்<br>முயற்சி | உதாரணம்:<br>சூரிய ஒளி<br>மழை நீர்<br>இயற்கைக் காற்று |



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# இயற்கை வளங்கள்

இயற்கை வளங்கள்
- மீள உருவாக்கக்கூடிய வளங்கள்
- மீள உருவாக்க முடியாத வளங்கள்

## மீள உருவாக்கக்கூடிய வளங்கள்

பயன்பாட்டிற்கு உட்படும் போது குறைவடையினும் மீண்டும் உருவாகக் கூடியவை.

## மீள உருவாக்க முடியாத வளங்கள் (புதுப்பிக்க முடியாத வளங்கள்)

பயன்பாட்டின் காரணமாகப் பெறுமானத் தேய்வுக்கு உட்படக்கூடிய வளங்கள் மீள உருவாக்க முடியாத வளங்கள் ஆகும்.

உதாரணம்: எரிவாயு, நிலக்கரி

இவ் வளங்கள் விரைவாகக் குறைவடைந்து வருகின்றமையால் எதிர்காலத்தில் இல்லாது போகும் வாய்ப்பை கொண்டவை. எனவே இவற்றின் பயன்பாட்டின் போது சிக்கனத்தை கடைப்பிடிப்பது அவசியமாகும்.

தொகுப்பு : திரு.இ.பிரபாகரன், ஆசிரியர் - பொருளியல், (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ்ப்பாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# இயற்கை வளங்களின் பயன்பாட்டின் போது கவனம் செலுத்தப்படாவிடில் சர்வதேச ரீதியாக ஏற்படக்கூடிய விளைவுகள்






தொகுப்பு : திரு.இ.பிரபாகரன், ஆசிரியர் - பொருளியல், (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ்ப்பாணம்)
கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk